# அரசாங்க அறிவித்தல்கள்

**1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

**3 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், ஓய்வுபெற்ற முன்னால் இராணுவத் தளபதியும், 332310097 V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைக் கொண்டவருமான ஹமில்டன் வனசிங்ஹ அவர்களினால் தருவிக்கப்பட்டு மற்றும் விடுவிக்கப்படதுமான அடிச்சட்டக இல. MR0KB8CC401054677 ஐயும் மற்றும் இயந்திரம் (எஞ்சின்) இல. 2GD-0416778 ஐயும் கொண்ட மோட்டார் வாகனம் அது இறக்குமதி செய்யப்படுகையில், 2017 ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2044/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு, செலுத்தத்தக்க உற்பத்தி வரியின் 35% இனை உற்பத்தி வரியாகசெலுத்த அல்லது அறவிடப்பட வேண்டுமென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன். மேலும், இறக்கமதிசெய்யப்பட்ட மேற்குறித்த வாகனமானது அதனைத் தருவிப்பவரின் பெயரிலேயே பதிவுசெய்யப்படல் வேண்டுமென்பதுடன், பதிவுசெய்யப்பட்ட திகதி முதல் 05 வருடங்களுக்கு அதனை பிறருக்கு கைமாற்றலாகாது. அத்துடன்,மேற்குறித்த உற்பத்தித் தீர்வையின் சலுகை வீதமானது அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வழங்கப்படுகிறது.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு
கொழும்பு01-
2018 ஆம் ஆண்டு 04 மாதம் 24 ஆந் திகதி